செய்தி வெளியீடு எண்.461 நாள் 22/11/2006

# இலவச வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டிகள் வழங்கும் திட்டம்

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது குறித்து அமைக்கப்பட்ட முதலமைச்சர் தலைமையிலான சட்டமன்றகட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் 5வது கூட்டம் 22.11.2006 அன்று மாலை 5.00 மணி அளவில் நாமக்கல் கவிஞர் மாளிகையில், 10வது மாடியில் உள்ள கூட்ட அரங்கில் கூடியது. இதில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், சட்டமன்றகட்சிகளின் தலைவர்கள் திரு.டி.சுதர்சனம் (காங்கிரஸ்) , திரு. கோ.க.மணி (பா.ம.க) திரு. சி.கோவிந்தசாமி இந்திய கம்யூனிஸ்ட் ( மார்க்ஸிஸ்ட்) , திரு. வை. சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்) இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சட்டமன்ற உறுப்பினர் திரு. எச். அப்துல் பாசித், திரு. கு.செல்வம் (விடுதலை சிறுத்தைகள்) மற்றும் திரு. மு.ஜகன் மூர்த்தி, (புரட்சி பாரதம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

அகிரா இன்டர்நேஷனல் பிரைவேட் லிட், சென்னை, ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி சோதனை சான்றிதழ் (Test Certificate) அளிக்காததால் அந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள 12 நிறுவனங்கள் சமர்ப்பித்த தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் **(Technical Bid)** மதிப்பீடு (Evaluation) செய்யும் அடுத்தக்கட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டன.

விலைப் புள்ளிகள் (Price Bid) 22.11.2006 அன்று மாலை 5.00 மணிக்கு திறக்கப்பட்டன.

கீழ்காணும் நிறுவனங்கள் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் நிராகரிக்கப்பட்டன.

| | |
|---|---|
| 1 | ஜெனஸ் எலக்டேரா டெக் லிட், நியூ டெல்லி |
| 2 | டான்டம் எலக்டரானிக்ஸ், சென்னை ( ஹய்சி சீனா டிவி) |
| 3 | டிராப்பிக் கம்பியூட்டர், சென்னை (பான்டா சீனா டிவி) |

தகுதியுள்ள 9 ஒப்பந்ததாரர்களின் விலைப் புள்ளிகள் (Price Bid) 22.11.2006 அன்று மாலை 5.00 மணிக்கு அவர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன.

நிறுவனங்கள் அளித்துள்ள விலைப்புள்ளிகள் பின்வருமாறு :–

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி நிறுவனங்களின் பெயர்கள் | ஒரு தொலைக்காட்சிப் பெட்டிக்கான விலைப் புள்ளி ரூபாய் |
|---|---|---|
| 1 | டிக்சன் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிட், நோயிடா | 2750.00 |
| 2 | ஏர்விஷன் இந்திய பிரைவேட் லிட், நோயிடா | 2789.70 |
| 3 | எல் பி எலக்டரானிக்ஸ் காஸியாபாத் | 2899.00 |
| 4 | வீடியோகான் கமினிகேஷன் லிட் & விடியோகான் இன்டஸ்ட்ரீஸ் லிட் | 2945.00 |

| | | |
|---|---|---|
| 5 | கேவின் இன்ஃபோடெக் பிரைவேட் லிட், (ஆஸ்கர்) நோயிடா | 2952.01 |
| 6 | மிர்க் எலக்டரானிக்ஸ் மும்பை | 2965.00 |
| 7 | கிச்சன் அப்லையன்சஸ் லிட், பங்களூர் & அப்லிக்காம் இந்தியா லிட் பங்களூர் | 2998.00 |
| 8 | எல் ஜி எலக்டரானிக்ஸ் மும்பை | 3099.70 |
| 9 | சானியோ பிபிஎல் லிட், பங்களூர் | 3215.13 |

குறைந்த விலைப்புள்ளி (L1) குறிப்பிட்ட திருவாளர் டிக்ஸன் நிறுவனத்தின் பிரதிநிதிகளை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி ஒரு தொலைக்காட்சிப் பெட்டிகான இறுதி விலையை நிர்ணயம் செய்தபின்னர், மற்ற ஒப்பந்ததாரர்களிடம் இறுதி விலைப் புள்ளிக்கு வழங்க ஒப்புதல் பெற்று, எந்தெந்த நிறுவனங்களிடமிருந்து எத்தனை எண்ணிக்கையை கொள்முதல் செய்யலாம் என்பது குறித்து 24.11.2006 அன்று காலை 11.30 மணியளவில் குழு கூடி முடிவுசெய்யப்படும்.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9